ஜவஹர்

# ஒண்டிவீரனுக்கு மணிமண்டபம் உண்டா?



முதல் சுதந்திரப் போர் என்று 1857-ல் நடந்த சிப்பாய் கலகத்தையே பாட நூல்கள் வழிமொழியும் நிலையில்... 1750-55 ஆண்டுகளில் நெற்கட்டான் செவ்வயல் பாளையக்காரர் புலித்தேவனும், அவரது படைத்தளபதி ஒண்டி வீரனும் நடத்திய போரே முதல் சுதந்திரப் போர் என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

ஆங்கிலேயர்களின் மாபெரும் கூட்டுப் படைகளை சிதறடித்த ஒண்டி வீரனின் வீரத்தை நினைவு கூறும் வகையில், ஆதித் தமிழர் பேரவை, தமிழ்ப் புலிகள் போன்ற இயக்கங்கள் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள நெற்கட்டான் செவ்வயலில் மிகச் சிறப்பாக கொண்டாடினர்.

நாட்டுக்காக உயிரைக் கொடுத்த ஒண்டிவீரனின் நினைவு நாளான ஆகஸ்ட் 20-ல் அரசே விழா எடுக்கவேண்டும், அவனுக்கு மணிமண்டபம் எழுப்ப வேண்டும் என்பதுதான் அவர்களின் கோரிக்கை.

தமிழ் புலிகள் இயக்கத்தின் துணை பொதுச் செயலாளர் பேரறிவாளனிடம் பேசினோம்.

"ஆங்கிலேயருக்கு எதிராக தென்னிந்தியாவில் போராடியவர்களில் குறிப்பிடத்தக்கவர் மாவீரன் ஒண்டி வீரன். வெள்ளையர்களை எதிர்த்து தனி ஒருவராக (ஒண்டியாக) சென்று வேட்டையாடிய மாவீரன். கொரில்லா போரில் வல்லவராகத் திகழ்ந்தவர். அவரது நினைவு தினத்தை அரசு விழாவாக கொண்டாட வேண்டும். அடிக்கல்லோடு நின்றுள்ள அவரது மணிமண்டபம் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்று பல போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

மேலும், சிவகங்கை சீமையில் இந்தியாவின் முதல் தற்கொலை போராளியாக, வெள்ளையர்களை எதிர்த்து உயிர் தியாகம் செய்த குயிலி என்பவருக்கும், மணி மண்டபம் அமைக்கப்பட்டு, அவரது தியாகத்தை நினைவு கூறவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களின் வரலாறுகள் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன. அவர்களின் உண்மையான வரலாறு வெளிக் கொணரப்பட வேண்டும். அதற்கும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

ஆதித் தமிழர் பேரவையின் மாநில பொதுச் செயலாளர், ஆ. நாகராசனிடம் பேசினோம்.

"1755-களிலேயே சுதந்திரப் போருக்கு அடித்தளம் இட்டது நெல்லை மாவட்டம் நெற்கட்டும் செவ்வயல் பாளையம் தான். அரசு இதனை தெளிவுற பாடப் புத்தகங்களில் கொண்டு வர வேண்டும். புலித்தேவனும், ஒண்டி வீரனும் இணைந்து போராடிய வரலாற்றை இளைய சமுதாயத்தினர் படிக்க வேண்டும். அப்போதுதான் சாதிப் பூசல்களுக்கு எதிராக இளைய சமுதாயம் திரும்பும். ஒண்டி வீரனின் வரலாற்றினை அரசே, புத்தகமாக வெளியிட வேண்டும். புலித்தேவன் மறைவுக்குப் பிறகும் 6 ஆண்டுகள் போரை நடத்தி, வெள்ளையர்களை பந்தாடியவன், ஒண்டி வீரன். அவர் நினைவு மணிமண்டபப் பணிகளை துரிதப்படுத்துவதோடு, அவரது வாரிசுகளுக்கு 5 ஏக்கர் விவசாய நிலம், படிப்பு, வேலை வாய்ப்பில் சலுகைகள் வழங்கிடவும் ஆவன செய்ய வேண்டும்" என்று வேண்டுகோள் வைத்தார்.



நாகராசன்



பேரறிவாளன்

ஒண்டி வீரன் நினைவுத் தூணுக்கு மாநில அமைச்சர் செந்தூர் பாண்டியன், துணை சபாநாயகர் தனபால் ஆகியோர் மரியாதை செலுத்தியுள்ள நிலையில்... இது முழு அரசு விழா ஆகவேண்டும் என்பதே உணர்வாளர்களின் கோரிக்கை! ■

படங்கள்: ஏ.எஸ். அருண்


ஆறுமுகம்

நெல்கட்டும்செவலில் வசிக்கும் மாமன்னர் பூலித்தேவனின் வாரிசுகள் ஆதித்தமிழர் பேரவையின் இந்தச் செயலைக் கண்டித்ததோடு, ஒண்டி வீரன் நினைவுச் சின்னத்திலிருக்கும் 'மாமன்னர்' என்கிற அடைமொழியை அழிக்க வேண்டும் என்று கலெக்டர் செல்வராஜிடம் மனு கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தினார்கள்.

இதுபற்றி பூலித்தேவனின் வாரிசும், வாசுதேவநல்லூர் பஞ்சாயத்து யூனியன் சேர்மனுமான கோமதி முத்து துரைச்சியிடம் பேசினோம். "மாமன்னர் பூலித்தேவனும், ஒண்டி வீரனும் இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய மாபெரும் தியாகிகள். ஆனால், சிலர் தங்களின் சுயலாபத்திற்காக அவர்களின் வீரத்தைக் கொச்சைப்படுத்துகிறார்கள். பூலித்தேவன் மாமன்னன், ஒண்டி வீரன் அவரது தளபதி என்பது உலகறிந்த விஷயம். அவர்கள் சாதி வித்தியாசம் பாராமல் சுதந்திரத்திற்காகப் போராடினார்கள் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாறு.

ஆனால், இன்று சிலர் வரலாற்றைத் திரித்து சுதந்திரப் போராட்டத்தை




# சோரியாசிஸ்

**சோரியாசிஸ் நோயின் அறிகுறிகள்**

தலையில் பொடுகு, அரிப்பு, முடிகொட்டுதல் உடலில் சில இடங்களில் அல்லது உடல் முழுவதும் உலர்ந்த புண்கள், அரிப்பு, அதிலிருந்து மீன் செதில் போல பொடுகு உதிர்தல், நக சொத்தை, மூட்டுகளில் வலியும் வீக்கமும், உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்களில் வெடிப்பு, அரிப்பு, தோல் உரிதல் போன்றவை சோரியாசிஸ் நோயின் அறிகுறிகளாகும்.

**சோரியாசிஸ் நோயின் வகைகள்**

Plaque Psoriasis, Guttate Psoriasis, Pustular Psoriasis, Inverse Psoriasis, Erythrodermic Psoriasis என சோரியாசிஸ் பல வகைப்படும்.

**சோரியாசிஸ் ஏற்பட காரணங்கள்**

இந்நோய் எதனால் ஏற்படுகிறது என்று இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனெனில் சோரியாசிஸ் நோயால் பாதிக்கப்பட்டவரை இரத்தப் பரிசோதனை உட்பட, முழு உடல் பரிசோதனை செய்து பார்த்தாலும் எல்லாம் நார்மலாகவே இருக்கும். எந்த நோயும் இல்லாத நல்ல ஆரோக்கியமான உடலமைப்புக் கொண்ட இளம் வயதினரைக் கூட இந்நோய் பாதிக்கிறது. எனவே இந்நோய் எதனால் ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை. இது தொற்று வியாதியோ பரம்பரை வியாதியோ அல்ல.

**சோரியாசிஸ் நோய்க்கு சிகிச்சை**

சோரியாசிஸ் நோயைக் கட்டுப்படுத்த பிற மருத்துவத்தில் தரப்படும் மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிட்டால் நாளடைவில் ஏராளமான பக்கவிளைவுகள் ஏற்படும். ஆனால், எங்களின் மூலிகை மருந்துகளை எத்தனை வருடங்கள் சாப்பிட்டாலும் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படாது. மேலும் பிற மருத்துவத்தால் இந்நோயைக் கட்டுப்படுத்தத்தான் முடியும்குணமாக்க முடியாது. ஆனால், Derma Cure என்ற எங்களின் மூலிகை மருத்துவ சிகிச்சையால் இந்நோய் முழுமையாக குணமடையும், இச்சிகிச்சை எடுத்துக்கொள்பவர்களுக்கு வாழ்நாளில் மீண்டும் இந்நோய் வராது.

மேலும் விவரங்களுக்கு ✆ 9444117668

## CNR ஹெர்ப்ஸ்

58, ராஜாபாதர் தெரு, (ரோகிணி லாட்ஜ் அருகில்)
பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17.
✆ 044-28150136, 28150137, 28150138

**ஜெயா டி.வியில்**
செவ்வாய் & வியாழன் தோறும் காலை 10 மணிக்கு டாக்டர் C.N.ராஜதுரையின் பேட்டியைக் காணலாம்

சிகிச்சை பெற விரும்புவர்கள் முன்அனுமதி பெற்று வரவும்

சாதியாக்கி தங்களை வளர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். தமிழக அரசுதான் இதில் தலையிட்டு நல்ல தீர்வை ஏற்படுத்தித் தரவேண்டும்” என்றார்.

தேவர் பேரவை மாநிலச் செயலாளர் மணித்தேவர், ஒண்டி வீரனுக்கு விழா எடுப்பதில் தவறில்லை. குருபூஜை நடத்தவும் ஆட்சேபணை இல்லை. ஆனால், ‘மாமன்னர்’ என்கிற வார்த்தையை மட்டும் பயன்படுத்தக் கூடாது. மீறி பயன்படுத்தினால் பெரும் பிரச்னை உருவாவதைத் தடுக்க முடியாது” என்றார் ஆவேசத்துடன்.

நெல்கட்டும்செவல் மக்கள் கலெக்டரிடம் மனு கொடுத்தவுடன் நெல்கட்டும் செவல் பச்சேரியில் உள்ள ஒண்டி வீரன் நினைவுச் சின்னத்தில் எழுதப்பட்டிருந்த ‘மாமன்னர்’ என்கிற வார்த்தை மட்டும் அழிக்கப்பட்டது.

இதுபற்றி ஒண்டிவீரனின் வாரிசான ஆறுமுகத்திடம் பேசினோம். “இராசையா என்பவர் எழுதிய ‘மாமன்னர் பூலித் தேவன் வரலாறு’ என்கிற புத்தகத்தின் அடிப்படையில் நாங்கள் இதுவரை ‘தளபதி ஒண்டி வீரன்’ என்றுதான் எழுதியும் பேசியும் வந்தோம். ஆனால், ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் அதியமான், ‘ஒண்டி வீரனும் மாமன்னர்தான் என்கிற ஆதாரம் என்னிடம் இருக்கிறது. மறுப்பவர்களை என்னிடம் பேசச் சொல்லுங்கள், விவாதத்திற்குத் தயாராக இருக்கிறேன். தவிர, கோர்ட்டுக்கும் போகலாம்’ என்று சொல்கிறார்.



ஒண்டிவீரன் நினைவிடத்தில் மாலை அணிவிக்கும் அதியமான்

அவர்கள் பாட்டுக்கு நினைவுச் சின்னத்தில், ‘மாமன்னர்’ ஒண்டி வீரன் என்று எழுதிவிட்டுப் போய்விட்டார்கள். இப்போது தேவர் சமுதாயம் மட்டுமல்ல, தேவேந்திரகுல சமுதாயமும் எங்களைப் புறக்கணிக்கிறது. வெறும் நாற்பது குடும்பங்களைக் கொண்ட எங்களை தங்கள் வயல் வேலைக்கு வரவேண்டாம், தங்கள் இடங்களில் ஆடு, மாடுகளை மேய்க்கக் கூடாது என்றும் சொல்லி விட்டார்கள். எங்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதோடு, சமூக மோதலும் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது’’ என்றார் வருத்தத்துடன்.



கோமதி முத்து துரைச்சி

இதுகுறித்து ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் அதியமானிடம் கேட்டோம்.

‘‘டெல்லி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழக பேராசிரியர் சீனிவாசன் இரண்டு ஆண்டுகள் ஆய்வு செய்து ‘தலித் கதைப்பாடல்’ என்கிற ஆராய்ச்சிப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதில் தமிழக தென்மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களின் மூலம் ‘பூலித்தேவனும், ஒண்டி வீரனும் சமகால தலைவர்கள், சமகால மன்னர்கள்’ என்று தெரிய வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நெல்கட்டும்செவல் என்பது ஒரு அருந்ததிய சமுதாய பாளையம்தான். மதுரை வீரன் ஒரு அருந்ததிய வீரன். ஆனால், அவன் தாழ்த்தப்பட்டவன் என்கிற ஒரே காரணத்திற்காக வரலாற்றை மாற்றியிருக்கிறார்கள். அவர் மாமன்னர் என்பதில் எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. என் வீட்டுக் குழந்தையை நான் ராஜா, மந்திரி என்று கொஞ்ச யார் சம்மதமும் கேட்கத் தேவையில்லை. அதற்காக நாங்கள் பூலித்தேவன் வீரத்தையும் மறுக்கவில்லை” என்றார் உறுதியுடன்.

அருந்ததியப் பெண்கள் இயக்கத் தலைவி முத்துமாரி, “ஒண்டி வீரனை மாமன்னர் என்று அழைக்கக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. நெல்கட்டும்செவல் பஞ்சாயத்துத் தலைவியாக அருந்ததியப் பெண் மல்லிகா வெற்றி பெற்றபோது ‘மறுபடியும் ஆட்சியைக் கைப்பற்றி விட்டீர்களே’ என்று சில வயதான பெரியவர்கள் சொன்னது ஒண்டி வீரனை மனதில் கொண்டுதான்” என்றார்.

ஒண்டி வீரன் விவகாரம் இரு சமுதாய மோதலாய் மாறி விடக்கூடாது என்பதே அனைவரின் கவலையும். ■

